செ.வெ.எண்:19/2016 நாள்:09.09.2016

பத்திரிக்கைச் செய்தி

சிவகங்கை மாவட்டத்தில் நடைபெறவுள்ள 2016 ஆண்டு நகர்புறம் / ஊரகம் / பேரூராட்சி பகுதிகளில் உள்ளாட்சித் தேர்தலுக்கு வாக்குச் சாவடிகள் பட்டியல்கள் பெறப்படுவது தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடன் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இ.ஆ,ப.,அவர்கள் தலைமையில் கலந்தாலோசனை கூட்டம் நடத்தப்பட்டது.

சிவகங்கை மாவட்டத்தில் ஊரக பகுதிகளில் 1737 வாக்குச் சாவடிகளும், நகராட்சிப் பகுதிகள் மற்றும் பேரூராட்சி பகுதிகளில் 386 வாக்குச் சாவடிகளும் ஆக மொத்தம் 2123 வாக்குச் சாவடி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது

வாக்குச் சாவடி பட்டியல் வெளியிடுவது தொடர்பாக எவ்வித ஆட்சேபனைகளும் அரசியல் கட்சிகளால் தெரிவிக்கப்படவில்லை.

இக்கூட்டத்தில் வட்டார வளர்ச்சி அலுவலலர்கள், பேரூராட்சி செயல் அலுவலர்கள் மற்றும் நகராட்சி ஆணையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

::வெளியீடு::

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
சிவகங்கை.

செ.வெ.எண்:20/2016 நாள்:09.09.2016

சிவகங்கை மாவட்டம்

23.09.2016 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்

சிவகங்கை மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் 23.09.2016 வெள்ளிக்கிழமை அன்று காலை 11.00 மணியளவில் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது. மாவட்டத்தின் அனைத்துத்துறை உயர் அலுவலர்கள் பங்கேற்கும் இக்கூட்டத்தில் மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள விவசாயப் பெருமக்கள் கலந்து கொண்டு விவசாயம் சார்ந்த குறைகளைத் தெரிவித்து அதனை நிவர்த்தி செய்து கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

::வெளியீடு::

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
சிவகங்கை.